செய்தி வெளியீடு எண்:064 நாள் :29.01.2016

## செய்தி வெளியீடு

01.01.2016–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2016–ன் இறுதி வாக்காளர் பட்டியல்கள் கடந்த 20.01.2016 வெளியிடப்பட்டன.

அவ்வாக்காளர் பட்டியலில் பெயர் விடுபட்டுள்ளவர்கள் தங்கள் பெயர்களைச் சேர்த்துக்கொள்ள மற்றும் புதிதாகப் பெயர் சேர்க்க/நீக்க/திருத்த/இடம் மாற்றம் செய்ய விண்ணப்பிக்க ஏதுவாக இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி வருகின்ற 31.01.2016 (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 06.02.2016 (சனிக்கிழமை) ஆகிய வார இறுதி நாட்களில் இரண்டு சிறப்பு முகாம்கள் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் நடத்தப்பட உள்ளன. அச்சிறப்பு முகாம்களில் தொடர்புடைய பாகத்தின் வாக்காளர் பட்டியல்கள் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். வாக்காளர் பட்டியல்களை தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளமான http://elections.tn.gov.in என்ற வலைதளத்திலும் காணலாம்.

தகுதியுள்ள வாக்காளர்கள் அனைவரும் உரிய ஆவணங்களுடன் தொடர்புடைய வாக்குச்சாவடிகளுக்குச் சென்று விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். வாக்காளர் பட்டியல்களை பிழையின்றித் தயாரிப்பதற்கு ஏதுவாக தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளத்தின் மூலமாக (http://elections.tn.gov.in) இணைய வழியில் விண்ணப்பிப்பதற்கு முன்னுரிமை தருமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி,**
**தமிழ்நாடு**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**